பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
15 02 2025 6 45
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பொதுத் தேர்வு எழுதவுள்ள மாணவர்கள் பதற்றமின்றி தேர்வெழுத **mygovindia** சமூக வலைதளத்தில் இன்று காலை ஒளிபரப்பாக உள்ள கலந்துரையாடல் நிகழ்ச்சியை காண வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

2. காசி தமிழ்ச் சங்கமத்தின் 3வது ஆண்டு நிகழ்ச்சி வாரணாசியில் இன்று தொடங்குகிறது.

3. தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் 56 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளாக வேளாண்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

4. அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருவதாக ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

5. ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் சென்னை அணி இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

தேர்வு குறித்த கலந்துரையாடல் நிகழ்ச்சியின் 5வது அத்தியாயத்தை தேர்வு எழுத உள்ள மாணவர்கள் அனைவரும் இன்று பார்த்து பயனடையுமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைப்பதிவில், ஆரோக்கியம், மன அமைதியைப் பொறுத்தவரை சத்குரு ஜக்கி வாசுதேவ் எப்போதும் எழுச்சியூட்டும் ஆளுமைகளில் ஒருவராக திகழ்கிறார் என்று குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்கள் பதற்றம் இல்லாமல் தேர்வெழுத அவருடன் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியை **mygovindia** சமூக வலைதளத்தில் இன்று காலை 10 மணிக்கு மாணவர்கள் பார்த்து பயனடைய வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் முன்முயற்சிகளால் நாட்டில் விளையாட்டுச் சூழலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

உத்தராகண்ட் மாநிலம் ஹல்த்வானியில் 38வது தேசிய விளையாட்டுப் போட்டிகளின் நிறைவு விழாவில் நேற்று உரையாற்றிய அவர், நாட்டின் பல மாவட்டங்களில் விளையாட்டு உள்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் ஊக்குவிக்கப்பட்டு வெளிப்படைத்தன்மையுடன் கூடிய தேர்வு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இது உலக அளவில் இந்திய விளையாட்டுத் துறையின் நற்பெயரை உயர்த்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் விளையாட்டுகளின் எதிர்காலம் பிரகாசமாக உள்ளது என்றும், ஃபிட் இந்தியா மற்றும் கேலோ இந்தியா போன்ற பிரதமர் எடுத்த முன் முயற்சிகள் மூலம் ஒவ்வொரு இளைஞரும் விளையாட்டில் ஆர்வமாக ஈடுபட முன்வந்துள்ளதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

<<<<>>>>

காசி தமிழ்ச் சங்கமம் இன்று வாரணாசியில் தொடங்குகிறது.

பத்து நாட்கள் நடைபெற உள்ள இந்த நிகழ்ச்சி இம்மாதம் 24ஆம் தேதி நிறைவடைய உள்ளது.

இந்தியாவின் வேற்றுமையில் ஒற்றுமை என்பதற்கு ஒரு சான்றாக காசி தமிழ்ச் சங்கமம் திகழ்கிறது என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், அமிர்தப் பெருவிழாவின் ஒரு பகுதியாக மத்திய அரசால் கடந்த 2022ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட காசி தமிழ்ச் சங்கமம், ஒரே இந்தியா – உன்னத இந்தியா என்ற உணர்வை பிரதிபலிப்பதாக கூறியுள்ளார்.

காசி தமிழ்ச் சங்கமம், தமிழகத்தின் வளமான பாரம்பரியம், வாரணாசியின் காலத்தால் அழியாத மரபுகள் ஆகியவற்றை வலுப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் மிகவும் மதிக்கத்தக்க முனிவரான மகரிஷி அகத்தியரை 3வது ஆண்டு காசி தமிழ்ச் சங்கமம் நினைவுகூர உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் 56 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளாக வேளாண்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் விரைவில் தாக்கல் செய்யப்பட உள்ள வேளாண் நிதிநிலை அறிக்கை தொடர்பாக நேற்று தஞ்சாவூரில், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை உள்ளிட்ட 8 மாவட்டங்களின் விவசாயிகளிடம் கருத்துக்களை அவர் கேட்டார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய அவர், விவசாயிகள் தெரிவித்த கோரிக்கைகளை மாநில அரசு கவனத்தில் கொள்ளும் என்று கூறினார்.

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் 30 லட்சம் விவசாயிகளுக்கு 5 ஆயிரத்து 242 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக பெற்றுத் தரப்பட்டுள்ளது என்று கூறினார்.

வளர்ச்சி நிவாரணமாக 14 லட்சம் விவசாயிகளுக்கு ஆயிரத்து 26 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருவதாக ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பில்லாநல்லூர், மதியம்பட்டி, நடுப்பட்டி உள்ளிட்ட ஊராட்சிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் 2 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ள 12 திட்டப் பணிகளை தொடங்கி வைத்தும், 7 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பில் 9 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் அவர் பேசினார்.

பொதுமக்கள் அரசிடம் எதிர்பார்க்கும் கோரிக்கைகளை பரிசீலித்து அவற்றுக்கு விரைவாக தீர்வுகாண வேண்டும் என்று முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

'மக்களைவைத் தேடி மருத்துவம்' திட்டம் ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு பெரிதும் பயனளித்து வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

சென்னை மற்றும் நாகப்பட்டினத்தில் கடல் ஆமைகள் பாதுகாப்பு மையங்களை அமைக்க தமிழக அரசு உத்தேசித்துள்ளதாகவும், இது கடல் ஆமைகள் பாதுகாப்பு முயற்சிகளுக்கு உத்வேகம் அளிக்கும் என்றும் மாநில வனத்துறை அமைச்சர் திரு. க. பொன்முடி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற கடல் ஆமைகள் பாதுகாப்பு குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், தமிழ்நாட்டில் ஆயிரத்து 76 கிலோ மீட்டர் நீளமுள்ள பரந்த கடற்கரைப் பகுதி, வரலாற்று ரீதியாக கடல் ஆமைகள் இனப்பெருக்கம் செய்வதற்கும், முட்டை இடுவதற்கும் வசதியாக உள்ளது என்று கூறினார்.

14 கடலோர மாவட்டங்களில் 8 பிரிவுகளில் 52 ஆமைக்குஞ்சு பொறிப்பகங்களை வனத்துறை நிறுவியுள்ளது என்றும் அவர் கூறினார்.

கடல் ஆமைகள் வழிமாறி கடல் நோக்கி செல்லாமல், கரையை நோக்கி செல்வதைத் தவிர்க்க கடற்கரையில் உள்ள விளக்குகளை இரவு நேரங்களில் பயன்படுத்துவதைத் தடுக்க தடை செய்யும் ஆணை விரைவில் அமல்படுத்தப்படும் என்றும் திரு. பொன்முடி தெரிவித்தார்.

<<<<>>>>

சென்னை சைதாப்பேட்டையில் உள்ள ஆட்டிறைச்சி கூடம், 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

நேற்று மாநகராட்சி அதிகாரிகளுடன் ஆய்வு நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆட்டிறைச்சிக் கூடத்தில் சிறிய அளவிலான கடைகள், கழிவுகளை சுத்திகரிக்கும் வசதி ஆகியவற்றை அமைக்க உள்ளதாக கூறினார்.

தென் சென்னைப் பகுதியில் சட்டத்திற்குப் புறம்பாக ஆடுகள் அறுக்கப்படுவது தவிர்க்கப்பட்டு நவீன ஆட்டிறைச்சிக் கூடத்தைப் பயன்படுத்தும் நிலையை மாநகராட்சி உருவாக்கும் என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

கோவில் சொத்துகளை பாதுகாக்கும் விஷயத்தில் அரசு அலுவலர்கள் தங்கள் கடமையை முழுமையாக செய்ய வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை கூறியுள்ளது.

இது தொடர்பான வழக்கை நேற்று விசாரித்த நீதிபதிகள், கோவில்களுக்கு அரசிடம் இருந்து வாடகை பாக்கி இருந்தால் அவற்றை முறையாக வசூலித்து கோவில் வங்கிக் கணக்கில் செலுத்த வேண்டியது இந்துசமய அறநிலையத்துறை அதிகாரிகளின் கடமை என்று கூறினர்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

காஸாவில் இருந்து ஹமாஸ் அமைப்பு விடுவிக்க உள்ள 3 பிணைக் கைதிகள் குறித்த விவரங்களை இஸ்ரேல் அறிவித்துள்ளது.

<<<<>>>>

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் நேற்று குண்டு வெடித்ததில் தொழிலாளர்கள் 11 பேர் உயிரிழந்தனர். 7 பேர் படுகாயமடைந்தனர்.

<<<<>>>>

அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருந்ததாக கண்டறியப்பட்ட மேலும் 119 இந்தியர்கள் இன்று பஞ்சாப் மாநிலத்திற்கு அழைத்து வரப்படுகின்றனர்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீர் யூனியன்பிரதேச சட்டப்பேரவையின் இரண்டாவது கட்ட கூட்டத்தொடர் அடுத்த மாதம் 3ஆம் தேதி தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

<<<<>>>>

இணையத்தை பாதுகாப்பாக பயன்படுத்துவது தொடர்பாக தேசிய தகவலியல் மையத்தின் சார்பில் தருமபுரியில் உள்ள கேந்திரிய வித்யாலயாவில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

<<<<>>>>

நீலகிரி மாவட்டத்தில் அரசு நலத்திட்டங்களின் அமலாக்கம் குறித்து சட்டப்பேரவயின் பொது நிறுவனங்கள் குழுவினர் நேற்று பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொண்டனர்.

<<<<>>>>

கோவில்பட்டி அருகே காரில் கடத்திச் செல்லப்பட்ட சுமார் ஒன்றரை டன் ரேஷன் அரிசியை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

<<<<>>>>

காஞ்சிபுரத்தில் 115 ஆண்டுகள் பழமையான ராஜாஜி காய்கறி சந்தை 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

<<<<>>>>

சென்னையில் கிழக்கு முகப்பேர், சீனிவாசா நகர், ஒலிம்பிக் காலனி, அக்ஷயா காலனி, செங்குன்றத்தில் எம்.ஜி.ஆர். நகர், காமராஜர் நகர் உள்ளிட்ட பகுதிகளில் இன்று காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின்தடை செய்யப்படும் என்று மின்வாரியம் அறிவித்துள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் சென்னை அணி இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி இன்று மாலை 5 மணிக்கு சென்னையில் உள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் தொடங்குகிறது.

இரவு மணி 7.30க்கு நடைபெற உள்ள மற்றொரு போட்டியில் கேரள அணி – மோகன் பஹன் அணியை எதிர்கொள்கிறது.

முன்னதாக நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஒடிசா அணி, 3-1 என்ற கோல் கணக்கில் ஹைதராபாத் அணியை வென்றது.

<<<<>>>>

மகளிர் ப்ரீமியர் லீக் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி – குஜராத் அணியை வென்றது.

வதோதராவில் நேற்று நடைபெற்ற முதல் போட்டியில் முதலில் விளையாடிய குஜராத் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 201 ரன் எடுத்தது.

202 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய பெங்களூரு அணி, 18 புள்ளி 3 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு இலக்கை எட்டியது.

இன்று வதோதராவில் இரவு மணி 7.30க்கு நடைபெற உள்ள போட்டியில் தில்லி அணி – மும்பை அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

ஹாங்காங்கில் நடைபெறும் ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியின் அரை இறுதியில் இந்திய மகளிர் அணி இன்று ஹாங்காங் அணியை எதிர்கொள்கிறது.

ஆடவர் பிரிவில் இந்தியா இன்று மலேசியா அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>